மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 3/22

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ரமேஷ் | தேதி : 05.11.25 |
| வயது : | த/பெ : சண்முக சுப்பிரமணியன் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**05.11.25 குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் கதவு எண் 3/84 ஆகும். அதன் சர்வே எண் 760/8 ஆகும். தாவா சொத்து எனது மாமா பிரம்மநாயகத்துக்கு அவரது அம்மா சிதம்பரத்தம்மாள் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தன் மூலம் பாத்தியப்பட்டது. சிதம்பரத்தம்மாளுக்கு அவர் அப்பா தெய்வநாயகம் மூலம் பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்து சிதம்பரத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. என்ன ஆவணம் உள்ளது என்றால் மூதாதையர் பத்திரங்கள் உள்ளன. யார் யாருக்கு எழுதிக் கொடுத்தது என்றால் மூதாதையர் வழியில் பாத்தியமானது ஆகும்.

2.சர்வே எண் 760/8 ன் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஈஸ்வரன் பெயரில் உள்ளது. அவர் பிரம்மநாயகத்தின் சகோதரர். நான் சொல்லுவது போல் தாவா சொத்து சிதம்பரத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. தாவா வீட்டின் தீர்வை யார் பெயரில் உள்ளது என்றால் பிரம்மநாயத்தின்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:42:55 +0530

பெயரில் உள்ளது. அதனை தாக்கல் செய்யலாம். தாவா சொத்தில் பிரதிவாதி 30 வருடமான குடியிருந்து வருகிறார். அவருக்கு வாடகை பாக்கி உள்ளதா என்றால் 6 மாதம் பாக்கி இருந்தது.

3.அதை வழக்கில் சொல்லியுள்ளோம். மார்ச் 2021ல் இருந்து 6 மாதம் வாடகை பாக்கி இருந்தது. வழக்கறிஞர் அறிவிப்பு எந்த கதவு எண் உள்ள வீட்டிற்கு அனுப்பினேன் என்றால் 3/84 க்கு பதிலாக தவறுதலாக 3/79 என்று அனுப்பப்பட்டது. 3/84 வீட்டிற்கு என்று குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது 3/84 வீடு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அது புது எண்ணாகும். நான் தாவா சொத்தினை பொறுத்து உரிய சட்டத்தின் படி காலஅவகாசம் வழங்கி அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு கதவு எண் 3/84 வீட்டை பொறுத்து நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4.தாவா சொத்து ஈஸ்வரன்பிள்ளைக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதி அவரிடம் இருந்து மாதம் ரூபாய் 100க்கு 1991ல் இருந்து வாடகை தாரராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. குழந்தைவேல் என்பவர் ஈஸ்வரன் பிள்ளைக்கு முகவராக இருந்து வாடகை வசூலித்து வருகிறார் என்றால் அவர் கணக்குபிள்ளை ஆவார். வாடகை படிப்படியாக உயர்ந்து வழக்கு தாக்கல் செய்யும்போது ரூயார் 750 ஆக உள்ளது என்றால் வாடகை ரூபாய் 750 தான்.

5.ஈஸ்வரன் பிள்ளை வீட்டை பராமரிக்காததால் பிரதிவாதி ரூபாய் 1,50,000 செலவு செய்து சிமெண்ட் கூரை, கிச்சன் ரூம் மற்றும் தரைதளம் ஆகியவற்றில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:42:59 +0530

பராமரிப்பு மேற்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூபாய் 1,50,000 செலவு செய்து பராமரித்ததால் தாவா சொத்து தற்போது குடியிருக்கும் நிலையில் தான் உள்ளது என்றால் சரியல்ல. 3/84 வீடு பிரம்மநாயகத்திற்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒருபோதும் பிரம்மநாயகத்திற்கு வாடகைக்கு ஒப்புகொண்டு வாடகை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. உரிய சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.11.05 20:43:03 +0530